இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 287 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 14– ஞாயிற்றுக்கிழமை 28 மே 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 287 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 14 - Sunday 28 May 2023 - Chennai 16 Pages ₹ 5.00

## உலகளவில் சுரங்க உபகரணங்கள் தயாரிப்பில் சிறந்து விளங்கும் கோமாட்சு

# ஜப்பான் நிறுவனத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.5.2023) ஜப்பான் நாட்டின் ஒசாகாவில் அமைந்துள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டு, அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார். இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் தொழிற்சாலையை மேலும் விரிவுபடுத்த அழைப்பு!

**ஒசாகா, மே 28-**

**உலகளவில் சுரங்க உபகரணங்கள்தயாரிப்பில்சிறந்து விளங்கும் ஜப்பான் நாட்டின் கோமாட்சு நிறுவனத்தைமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இந்நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்த அழைப்பு விடுத்தார்.**

ஒசாகாவில் உள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.5.2023) பார்வையிட்டு, அந்நிறுவன உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், 23.5.2023 அன்று சிங்கப்பூர் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் அரசு முறை பயணத்தை முடித்துக் கொண்டு 25.5.2023 அன்று இரவு ஜப்பான் நாட்டின் ஒசாகா மாகாணம் வந்தடைந்தார்.

அதனைத் தொடர்ந்து 26.5.2023 அன்று காலை ஒசாகாவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்ளவும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்து உரையாற்றினார். தொடர்ந்து, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டைசல் சேஃப்டி சிஸ்டம்ஸ் (Daicel Safety Systems) நிறுவனத்திற்கும் இடையே முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

### உலகளாவிய தர நிலை!

ஒசாகாவில் உள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

கோமாட்சு நிறுவனம் கட்டுமானம் மற்றும் சுரங்க உபகரணங்கள் தயாரிப்புத் துறையில் உலகளவில் சிறந்து விளங்கும் நிறுவனமாகும். இந்நிறுவனம் தொழில்துறை இயந்திரங்கள், வாகன தளவாடங்கள், மின்னணுவியல் போன்ற பிற வணிகங்களிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்நிறுவனம், தமிழ்நாட்டில் கோமாட்சு இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் ஒரகடம் சிப்காட் தொழிற் பேட்டையில் டம்ப் டிரக் (Dump truck), சுரங்க உபகரணங்கள், ஹைட்ராலிக் அகழ்வாராய்வு இயந்திரம் (Hydraulic Excavators) போன்றவற்றை உலகளாவிய தரநிலையுடன் தயாரித்து உள்நாடு மற்றும் சர்வதேச சந்தை தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

### ஏற்றுமதி செய்யும் நிறுவனம்!

முதலமைச்சர் அவர்கள், ஒசாகாவில் அமைந்துள்ள கோமாட்சு நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை நேற்று முன்தினம் (26.5.2023) பார்வையிட்டார். அப்போது அத்தொழிற்சாலையின் செயல்பாடுகள் குறித்த காட்சி விளக்கப் படத்தை (Power Point Presentation) பார்வையிட்டு, அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் டகாயுகி புரோகுஷி (Mr. Takayuki Furukoshi), கோ கமாடா (Mr. Go Kamada) ஆகியோருடன் கலந்துரையாடினார்.

அப்போது கோமாட்சு நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், முதலமைச்சர் அவர்களிடம், இந்நிறுவனம் சர்வதேச தரத்தில் உபகரணங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வருவதாக தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பின்போது, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார். மேலும், தமிழ்நாட்டில் உள்ள கோமாட்சு தொழிற்சாலையை விரிவாக்கம் செய்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்களிடம் கோரிக்கை விடுத்தார். அதற்கு அந்நிறுவனத்தினர் உரிய ஆய்வுகள் மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்கள்.

இந்த நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டிநிறுவனத்தின்மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம்!

## 8 மாநில முதலமைச்சர்கள் புறக்கணிப்பு!

*புதுடெல்லி, மே 28 -*

*பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்று வரும் நிதி ஆயோக் கூட்டத்தை 8 மாநில முதலமைச்சர்கள் புறக்கணித்தனர்.*

*பிரதமர் மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் புதுடெல்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாநில முதலமைச்சர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள் கலந்து கொண்டுள்ளனர்.*

*அதேநேரத்தில் 8 மாநில முதலமைச்சர்கள் நிதி ஆயோக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளனர்.*

*கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார், மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் உள்ளிட்டோர் இந்த நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர்.*

*மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒன்றிய பா.ஜ.க., அரசைக் கண்டிக்கும் வகையிலும், மாநில அரசுகளின் செயல்பாடுகளில் ஆளுநர்கள் மூலம் தலையிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கிலும் இந்தக் கூட்டத்தை எதிர்க்கட்சி மாநில முதலமைச்சர்கள் புறக்கணித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

*புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவரை அழைக்காததற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்திருப்பதாக பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.*

*டெல்லி அரசுக்கு எதிரான ஒன்றிய அரசின் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணிப்பதாக அம்மாநில முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.*

*இந்நிலையில், நிதி ஆயோக் கூட்டத்தில், சுகாதாரம், திறன் மேம்பாடு, பெண்களுக்கு அதிகாரமளித்தல், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த இந்தியா என்ற கனவை நிறைவேற்றுவதற்கான இலக்கு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.*

## மணிப்பூரில் இணையதள சேவைகள் முடக்கம்!

*இம்பால், மே 28 -*

*வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் மெய்தி சமூகத்தினருக்கும் பழங்குடி இன மக்களுக்கும் இடையே இம்மாதம் தொடக்கத்தில் மோதல் ஏற்பட்டது. இது வன்முறையாக மாறியது. வாகனங்கள், வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. இந்த கலவரத்தில் பலர் இறந்தனர். கலவரத்தை அடக்க ராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். அதன் பிறகு அங்கு நிலைமை கட்டுக்குள் வந்தது. இந்த நிலையில் மீண்டும் அங்கு வன்முறை வெடித்து உள்ளதால் பதற்றமான சூழ்நிலை உருவாகி உள்ளது.*

*வன்முறை சம்பவங்கள் மேலும் பரவாமல் தடுக்க மேலும் 5 நாட்களுக்கு மணிப்பூர் மாநிலத்தில் இணையதள சேவைகள் அனைத்தும் முடக்கப்பட்டு உள்ளதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.*

## கர்நாடகாவில் அமைச்சரவை விரிவாக்கம்!

# 24 பேர் அமைச்சர்களாக நியமனம்!

## ஆளுநர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்!

*பெங்களூரு, மே 28 -*

*கர்நாடக தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப் பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றியது. முதலமைச்சராக சித்தராமையாவும், துணை முதலமைச்ச ராக டி.கே. சிவக்கு மாரும் கடந்த 20ம் தேதி பதவியேற்றுக்கொண்டனர். அவர்களுடன் 8 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.*

*இந்நிலையில், காங்கிரஸ் அரசில் மேலும் 24 பேர் நேற்று அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். அதன் தொடர்ச்சியாக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களுக்கான இலாக்காக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*அதன்படி, சித்தராமையாவுக்கு நிதித் துறை, அமைச்சரவை விவகாரங்கள் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. டி.கே.சிவகுமாருக்கு நீர்பாசனத் துறை, பெங்களூரு வளர்ச்சித்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. பரமேஸ்வராவுக்கு உள் துறை, எச்.கே.பாட்டீலுக்கு சட்டம், முனியப்பாவுக்கு உணவுத்துறை, ஜார்ஜூக்கு எரிசக்தித் துறை, ராமலிங்கா ரெட்டிக்கு போக்குவரத்துத்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிரியங்க் கார்கேவுக்கு ஊரக வளர்ச்சித் துறையும், சதீஷ் ஜார்கிஹோலிக்கு பொதுப் பணித்துறையும், தினேஷ் குண்டுராவுக்கு சுகாதாரத்துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

*அமைச்சர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஆளுநர் தாவர்சந்த் கெலாட் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.*

## ஜப்பான் என்றாலே

# புதுமையும் கண்டுபிடிப்புகளும்தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

ஒசாகா, மே 28–

“ஜப்பான் என்றாலே புதுமையும் கண்டுபிடிப்புகளும்தான்” முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:–

**ஜப்பான் என்றாலே புதுமையும் கண்டுபிடிப்புகளும்தான்!**

**கட்டுமானம், சுரங்கம் போன்ற மிகக் கடுமையான மனித உழைப்பைக் கோரும் துறைகளில், பணிகளை எளிமையாகவும் பாதுகாப்பாகவும் செய்து முடித்திடும் கருவிகளை உற்பத்தி செய்யும் நூற்றாண்டு பழமையான கோமாட்சு நிறுவனத்தின் ஒசாகா தொழிற்சாலையைப் பார்வையிட்டேன்.**

**ஏற்கனவே கடந்த 2007ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கோமாட்சு தொழிற்சாலையை அமைச்சராகத் திறந்து வைத்த அதே உணர்வுடன், அந்நிறுவனம் தமிழ்நாட்டில் மேலும் முதலீடு செய்ய வேண்டும் என்று கோரி, GIM2024க்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.